**செய்தி வெளியீடு எண் : 1212** **நாள் : 20.06.2023**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு

திருவாரூர்த் தேரழகைத் தன்னகத்தே கொண்ட பேரழகாம் கலைஞர் கோட்டத்தின் திறப்பு விழா, கலைஞர் பிறந்த மண்ணில்!

கவியரங்கம் – பட்டிமன்றம் – பாட்டரங்கம் – வாழ்த்தரங்கம் எனச் சொற்களாலும் எழுத்துகளாலும் நம் எண்ணங்களில் நிலைகொண்டு எங்கும் நிறைந்துவிட்ட முத்தமிழ் வித்தகர் கலைஞர் 100–இல், மாண்புமிகு பீகார் மாநில துணை முதலமைச்சர் திரு. தேஜஸ்வி யாதவ் அவர்களோடு கலைஞர் கோட்டம் திறந்து வைத்தோம்.

நீடுபுகழ் கலைஞரின் வண்மையைக் காட்சிப்படுத்தும் இந்த எழிலோவியம் அமையக் காரணமான அனைவர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி!

தலைவர் கலைஞரின் கொள்கை வாரிசுகளே!

இந்தியாவின் ஜனநாயகத்தைக் காத்திடும் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றிக் கலைஞருக்குப் புகழ்சேர்த்திட இன்றே பணி தொடங்குவோம்! இலட்சியம் வெல்வோம்! நாட்டைக் காப்போம்!

நாற்பதும் நமதே! நாடும் நமதே!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in